ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1815/14 - 2013 ජූනි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.06.20

*1815/14 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

*அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 01/2013*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி, திட்டமிடல் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை அனைவரும் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*பீ. பி. ஜயசுந்தர,*
*செயலாளர்,*
*நிதி, திட்டமிடல் அமைச்சு.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2013, யூன் 20.*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*கட்டளை*

*இதனகத்துள்ள அட்டவணையின் 3 ஆம் நிரலில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களின் மீதான இறக்குமதித் தீர்வை வீதங்களை விதிக்கும், அத்துடன் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 'அ' எனும் அட்டவணையின் கீழான சலுகைப் பட்டியலும் விலக்களிப்புப் பட்டியலும் சேர்க்கப்படும் தன்மையான தீர்மானமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகையால் ;*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கும் வகையில் 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2013, யூன் 21 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வருமாறு இக்கட்டளை விடுக்கின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2013, யூன் 20.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| இ.ப. த.இல. | இ.மு. குறியீடு | | விபரம் | தீர்வை வீதம் முன்னுரிமை | தீர்வை வீதம் பொது | அளவுக் கூறு |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) | (6) |
| 71.08 | | | தங்கம் (பிளாட்டின் முலாம் பூசப்பட்ட தங்கம் உட்பட) வேலைப்பாடற்றவை அல்லது குறையுற்பத்தியாக்கப்பட்ட நிலையிலுள்ளவை அல்லது பொடி நிலையிலுள்ளவை | | | |
| | | - | நாணயம் சாராத | | | |
| | 7108.11 | - | பொடிநிலையில் | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) 4% | 5% | கி.கி. |
| | 7108.12 | - | பிற வேலைப்பாடுகளற்ற நிலையில் | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) 4% | 5% | கி.கி. |
| | 7108.13 | - | பிற குறை உற்பத்தியாக்கப்பட்ட நிலையில் | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) 4% | 5% | கி.கி. |
| | 7108.20 | - | நாணயம் சார்ந்த | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) 4% | 5% | கி.கி. |

07-138

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.